[1971 டிசம்பர் 17

திரு. கோவை. செழியன் : கிண்டியில் இருக்கும் ஆராய்ச்சி நிலையத்திற்குத் தண்ணீர் அனுப்பினால் இரண்டு, மூன்று வருஷத்திற்குப் பதிலே அனுப்புவ தில்லை. ஒருமுறை நானே நேரில் சென்று கேட்ட பின்னரும் அனுப்பாமல் இருந்ததற்குச் சொல்லும் காரணம் எம்.எல்.ஏ., வந்து கேட்டதால் அனுப்ப வில்லை என்ற முறையில் அந்த அதிகாரி சொல்லியிருக்கிறார். இதனால் பொது மக்கள் பாதிக்கப்படுகின்ற காரணத்தால் இந்த முறையை எடுத்துவிட அர சாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : உரியவர்களிடத்தில் கேட்காத காரணத்தால் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை கனம் அங்கத் தினர் அவர்கள் உணருவார்கள் என்று கருதுகிறேன். இதற்கு பொதுச் சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து பதில் கிடைக்க வேண்டும். இது விவாசயத் துறையின் வரம்புக்கு அப்பாற்பட்டது என்பதை ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

திரு. கோவை செழியன் : இந்தக் கேள்வியை மாற்றி வேறு ஒரு அமைச் சருக்குப் போட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்குதான் போட்டிருக்கிறது.

உவர் நிலங்கள்.

* 531 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உவர் நிலங்களைப் பயன்தரும் விளை நிலங்களாக மாற்றுவதற்கு, அரசு சிறப்புத் திட்டம் ஏதேனும் தீட்டியுள்ளதா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) : சட்டமன்றப் பேரவையின் முன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. மலைச்சாமி : இந்த விவர அறிக்கையில் கோவை, தருமபுரி மாவட்டங்களில்தான் இந்தத் திட்டம் நடைமுறையில் இருப்பதாகக்கூறப் பட்டிருக்கிறது. எனவே இந்தத் திட்டத்தை தமிழகம் முழுமைக்கும் பயன் படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தமிழகத்தில் எல்லா இடங்களிலும் உவர் நிலங்கள் இல்லை என்பதை உறுப்பினர் அவர்கள் உணருவார்கள் என்று கருதுகிறேன். எங்கெங்கு உவர் நிலங்கள் இருக்கின்றனவோ அங்குதான் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

* 532 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up a Council to study Salinity in soils; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை, ஐயா.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

@ 317-318-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.